**DVC.No.1/2023 PW-1**

நாள் : 23.04.2024

பெயர் : முபீனா

க/பெ : அலி ஹீசைன்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

உங்களுடைய கணவர் மனநலம் குன்றிய மாற்றுதிறனாளி என்றால் ஆமாம். இராணிபேட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 2022 ம் வருடம் யார் யார் எல்லாம் புகார் கொடுக்க சென்றீர்கள் என்றால் நானும் என் தாயாரும் சென்றோம். புகாரில் தன்னையும் தன் கணவரையும் தனி குடுத்தனம் வைக்கவில்லை என்று தான் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் ஆமாம். அந்த புகாரில் தன்னையும் தன் கணவரையும் தனியாக வசிக்க வைத்தால் புகாரை வாபஸ் பெறுவதாக கூறியுள்ளீர்கள் என்றால் ஆமாம். புகாரில் உங்களுடைய கோரிக்கை உங்களையும் உங்கள் கணவரையும் தனியாக வசிக்க வைக்க வேண்டும் என்பதற்காக தான் என்றால் ஆமாம். அதன் பிறகு என்னை பிரதிவாதிகள் தரப்பினர்கள் காவல் நிலையத்தில் அடிக்க வந்தார்கள் அதனால் இப்போது நான் என் கணவருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை. காவல்நிலையத்திற்கு யார் யார் வந்தார்கள் என்றால் என் கணவர் மற்றும் அவரின் பெற்றோர்கள் வந்தார்கள்.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மேற்சொன்ன விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். உங்கள் கணவர் மனநலம் குன்றியவர் என்பதற்காக நீதிமன்றத்தில் தனியாக மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. எதற்காக இந்த மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்காகவும் என் பிள்ளைக்காகவும் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உங்களை எதிர்மனுதாரர்கள் அவர்கள் வீட்டிற்கு வருவதற்கு எந்த தடையும் விதிக்கவில்லை என்றால் என்னை அவர்கள் வரசொல்லவில்லை. நீங்கள் பிரதிவாதிகள் வீட்டிற்கு சென்று அதை அவர்கள் தடுத்தார்களா என்றால் இல்லை.

சமூக நலத்துறையில் உங்களையும் எதிர்மனுதாரரையும் வைத்து விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் விசாரித்தார்கள். சமூக நலத்துறை அதிகாரி குடும்பத்தில் இருக்க கூடிய சிறு சிறு பிரச்சனைகள் தான் நீங்கள் மனுவில் சொல்லியுள்ளது எனவே நீங்கள் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து குடும்பம் நடத்துங்கள் என்று ஆலோசனை வழங்கினார்களா என்றால் இல்லை. என் மாமனார் மாமியாரிடம் குறைபாடுகள் உள்ள உங்கள் மகனுக்கு ஏன் திருமணம் செய்து வைத்து ஒரு பெண்ணின் வாழ்க்கையை பாழக்கிவிட்டீர்கள் என்று கூறினார்கள். சமூக நலத்துறை அதிகாரியிடம் நீங்கள் ஆற்காட்டில் தனிகுடுத்தனம் வைத்தால் சரியாகிவிடும் என்று கூறினீர்களா என்றால் இல்லை. ராணிபேட்டையில் தனிகுடுத்தனம் வைக்க வேண்டும் என்று தான் சொன்னேன். உங்கள் தாயார் நீங்கள் சொன்ன அதே கருத்தை தான் கூறினாரா என்றால் ஆமாம்.

பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் எதுவும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பிரமாணவாக்குமூலத்தில் எதிர் மனுதாரர் ஏற்படுத்தியதாக சொல்லப்படும் காயத்திற்கு மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் ஆமாம். மருத்துவரிடம் எடுத்துக்கொண்ட சிகிச்சைக்குண்டான ஆவணங்கள்

வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அந்த ஆவணங்களை பார்த்தால் நீங்கள் கூறுவது சரியா என்று தெரிய வரும் என்றால் ஆமாம். நான் எதிர் மனுதாரர் ஏற்படுத்திய காயத்திற்கு நான் சிகிச்சை எடுக்கவில்லை மாறாக நான் கருவுற்ற காலத்தில் மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

இன்றளவும் உங்களை எதிர்மனுதாரர் தரப்பினர் நீங்கள் கோரியவாறு தனி குடுத்தனம் வைக்க தயாராக இருக்கிறார்கள் என்றால் நான் அவருடன் செல்ல விரும்பவில்லை. தனிகுடுத்தனம் வைக்கவில்லை என்ற காரணத்தினாலே எதிர் மனுதாரர் மீது பொய்யான சங்கதிகளை புகாராக மனுவில் கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை நான் மனுவில் சொன்ன விரங்கள் அனைத்தும் உண்மை. எதிர்மனுதாரர் வீட்டில் உங்களுடைய பொருட்கள் இருப்பது பற்றி பட்டியலை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். உங்களுடைய பொருட்களை நீங்கள் எடுத்து செல்ல எதிர் மனுதாரர்கள் மறுக்கவில்லை என்றால் ஆமாம். நீங்களும் எதிர்மனுதாரரும் எதிர் மனுதாரரின் வீட்டில் ஒன்றாக உட்கார்ந்து உணவு உண்பது வழக்கம் என்றால் இல்லை.

உங்கள் தாயார் இராணிபேட்டை ஜமாத்தில் உங்களுடைய குடும்ப பிரச்சனை குறித்து தெரியபடுத்தினாரா என்றால் ஆமாம். ஆனால் அவர்கள் உங்கள் மகள் வேண்டும் என்றால் நீங்கள் வைத்து கொள்ளுங்கள் வேண்டாம என்று விரும்பினால் நீங்கள் எதிர் மனுதாரர் வீட்டிற்கு அனுப்புங்கள் என்று கூறினார்கள். ஆற்காடு ஜமாத்தில் பிரச்சனை சம்மந்தமாக தெரியப்படுத்தவில்லை என்றால் ஆமாம். இராணிபேட்டை ஜமாத்தில் எழுத்து பூர்வமாக புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. இராணிபேட்டை ஜமாத்தில்

என் கணவர் மற்றும் அவர் பெற்றோரை விசாரித்தார்களா என்றால் இல்லை. ஜமாத்தில் விசாரிக்காமலையே உங்கள் பெண்ணை நீங்களே வைத்து கொள்ளுங்கள் என்று உங்கள் தாயாரிடம் கூறினார்களா என்றால் ஆமாம். 1ம் எதிர் மனுதாரரிடம் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பராமரிப்பு தொகை கேட்டீர்களா என்றால் இல்லை. ஆனால் சமூக நலத்துறை அதிகாரி விசாரணை மேற்கொண்ட போது என் மகனுடைய பள்ளி மற்றும் பராமரிப்பு செலவை செய்யுமாறு கோரினேன் எதிர்மனுதாரர்கள் என் மகன் என்னுடன் இருக்கும் வரை  செலவுகளை பார்க்க முடியாது என்று கூறீனார்கள் அவர்களுடன் இருந்தார்கள் தான் அவர்கள் மகன் என்று கூறிவிட்டார்கள். எதிர்மனுதாரர் உங்களுடைய மகனை பார்க்க வந்தபோது நீங்கள் அனுமதி மறுத்துவிட்டீர்களா என்றால் இல்லை அவர்கள் வரவே இல்லை. என்னுடைய இரண்டாவது குழந்தையை ஒரு வருடம் கழித்து காவல் நிலையத்தில் வைத்து தான் முதன் முறையாக பார்த்தார்கள்.

எதிர்மனுதாரர்கள் பிள்ளைகளை பார்க்க வந்தார்கள் நீங்கள் தான் அதை தடுத்து விட்டீர்கள் என்றால் இல்லை. நீதிமன்றத்திற்கு நீங்கள் வரும்போது பிள்ளைகளை அழைத்து வரவில்லை என்றால் என்னுடைய மகனுக்கு பள்ளி விடுமுறை என்றால் அழைத்து வருவேன் மகள் என்னுடன் தான் வந்துள்ளார்கள். சமரச மையத்தில் பிள்ளைகளை எதிர்மனுதாரர்கள் பார்க்க நீங்கள் அனுமதிக்கவில்லை என்றால் இல்லை அவர்களுக்கு பாசமே இல்லை இதுவரை என் பிள்ளைகளுக்கு அவர்களுடைய தகப்பானர் யார் என்றே தெரியாது. பிள்ளைகளை அழைத்து செல்ல தயாராக இருக்கிறார்கள் அதற்கு நீங்கள் தான் தடையாக இருக்கிறீர்கள் என்றால் இல்லை.

தனிகுடுத்தனம் போக வேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதால் நீதிமன்றத்தில் உரிய உத்திரவு இல்லாமல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனுவே அனுமானத்தின் அடிப்படையிலும் பொய்யான சங்கதிகள் அடிப்படையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இன்றைய நாள் வரை நீங்கள் எதிர்மனுதாரர் வீட்டிற்கு செல்வதற்கு அவர்கள் தடை எதுவும் விதிக்வில்லை என்றால் சரியல்ல.